## தமிழ்நாட்டில் கடும் மழை, வெள்ளச் சேதம்!

# நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்காதது ஏன்?

### மக்களவையில் ஆ.ராசா கேள்வி!



புதுடெல்லி, பிப். 12-
"தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடும் வெள்ளச் சேதங்களுக்கு நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்காதது ஏன்?" என்று நாடாளுமன்ற மக்களவையில் கழகக் கொறடா ஆ.ராசா மற்றும் அ.கணேசமூர்த்தி ஆகியோர் கேள்வி எழுப்பினார்.

அ. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், சென்னை, அதன் புறநகர்ப் பகுதிகள் மற்றும் தென் தமிழகப் பகுதிகளில் மிக பலத்த மழைப் பொழிவாலும் வெள்ளத்தாலும் பல இழப்புகளும் நஷ்டங்களும் இயற்கைப் பேரிடரால் ஏற்பட்டன. அதைப் பற்றி ஆய்வு செய்து இழப்பின் தன்மையைக் கணிக்க ஒன்றிய அரசு மத்தியக் குழு எதையேனும் அனுப்பியுள்ளதா?

ஆ. ஆம் எனில். அது பற்றிய விவரங்களைத் தெரிவிக்க முடியுமா?

இ. தமிழ்நாட்டின் எட்டு மாவட்டங்களில் இயற்கைப் பேரிடர்களால் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, நிவாரணப் பணிகளுக்காக நிதிஉதவி கோரி தமிழ்நாடு அரசு வேண்டுகோள் விடுத்திருந்ததா?

ஈ. ஆம் எனில், மாநிலம் கோரிய மொத்த நிதி உதவித் தொகை எவ்வளவு? பேரிடர் நிவாரணத் தொகையாக இதுவரை தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

உ. பொதுச் சொத்துகள் கடுமையான சேதத்திற்கு இரையாகியுள்ளன. நிவாரணப் பணிகள் விரைவில் நடைபெறவேண்டும். மொத்த நிதித் தொகையும், உதவிகளும், ஒன்றிய அரசின் ஒத்துழைப்பும் தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கு ஏற்ப வழங்கப்பட எவ்வளவு கால அவகாசம் ஆகும்?

இதற்கு உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்த மாநில அமைச்சர் நித்யானந்த் ராய் அளித்த பதில் வருமாறு:-

நாட்டில் நிகழும் இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் சேதங்களை ஆய்வு செய்து, நிவாரணப் பணிகளைத் தக்கபடி மேற்கொள்ள, தேசிய மற்றும் மாநில அளவில் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்க குறிப்பிட்ட வழி முறைகள் உள்ளன. பேரிடர் நிவாரணத்திற்கான தேசிய கோட்பாட்டின்படி, நிவாரணப் பணிகளுக்கான முக்கியப் பொறுப்பு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கே உள்ளதாகும். ஒன்றிய அரசு இயன்றவரை அனைத்து வகைகளிலும் மாநில அரசுகளின் முயற்சிகளுக்கு துணை நிற்கும். நிதி உதவி, நிவாரணப் பொருட்கள் உரிய இடங்களைச் சென்றடைவது போன்றவற்றுக்கு ஒன்றிய அரசு உதவிபுரியும். நிலைமையைச் சீர்படுத்த ஒன்றிய அரசு இயன்றவரை அனைத்து உதவிகளையும் செய்யும்.

புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் சேதங்களைக் கணக்கிட்டு நிதிஉதவிகள் மக்களுக்கு வழங்கவேண்டியது மாநில அரசுகளின் கடமை. இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டியது மாநில அரசுகளின் பொறுப்பு. இதற்கென மாநில அரசுகளுக்கு ஏற்கெனவே மாநிலப் பேரிடர் நிவாரண நிதி என்ற பெயரில் (State Disaster Response Fund) (SDRF மாநில அரசுகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அதிக உதவித் தொகை தேசியப் பேரிடர் நிவாரண உதவி என்ற திட்டத்தின் கீழ் (National Disaster Response Rund NDRF) விதிமுறைகளின் படி நீட்டிக்கப்படும். அவற்றுள் ஒன்று Inter Ministerial Central Team (IMCT) எனும் பிரத்யேகக் குழுவின் ஆய்வு அவசியம் என்பது. இந்த மய்யக் குழு சேதங்களை நேரிடையாகப் பார்வையிட்டு அறிக்கை அளிக்கும். அதன் அடிப்படையில் உபரியான நிதி உதவி பரிசீலிக்கப்படும். SDRF/NDRF அமைப்புகள் மூலம் அளிக்கப்படும் நிதி உதவியும் நிவாரணங் களுக்காகவேயொழிய, ஏற்பட்ட நஷ்டங்கள், இழப்புகள் அனைத்திற்கும் ஈடான தொகை அல்ல.

பாதிக்கப்பட்டுள்ள மாநில மக்களுக்கு உதவும் விதமாக தமிழ்நாடு அரசுக்கு SDRF திட்டத்தின் கீழ், 2023-24 நிதி ஆண்டுக்கென ரூபாய் 1200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பங்காக 900 கோடி ரூபாயும் மாநிலப் பங்காக 300 கோடி ரூபாயும் என்ற கணக்கில்).

முதல் தவணையாக ரூபாய் 450 கோடி ஒன்றிய அரசின் பங்காக 10.07.2023 நாளன்று வழங்கப்பட்டுவிட்டது. இதைத் தவிர, MI CHAUNG புயல் தாக்கிய போது, SDRF திட்டத்தின் கீழ், இரண்டாவது தவணையாக ரூபாய் 450 கோடி மாநில அரசுக்கு 12.12.2023 நாளன்று முன்னதாகவே வழங்கப்பட்டது. இது புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கான நிவாரண உதவியாகும்.

மேலும், தனது SDRF கணக்கில் ரூபாய் 813.15 கோடி துவக்க இருப்பாக (Opening Balance) இருப்பதாக தமிழ்நாடு அரசே அறிவித்துள்ளது. இது 2023 ஏப்ரல் 1 ஆம் நாள் நிலவரப்படியானது. மொத்தத்தில், நிவாரணப் பணிகளுக்கென மாநில அரசின் SDRF கணக்கில் உள்ள தொகை ரூபாய் 2013.15 கோடியாகும். (1200+813.15).

2023, டிசம்பர் 3 மற்றும் 4ஆம் நாள் தாக்கிய MI CHAUNG புயலாலும் பலத்த மழையாலும் தமிழ்நாட்டின் வடமாவட்டங்கள் நான்கு பாதிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 2023, டிசம்பர் 17, 18ஆம் நாளன்று பொழிந்த கனத்த மழையால் தமிழ்நாட்டின் நான்கு தென் மாவட்டங்களில் வெள்ளத்தாலும் நீர்த் தேக்கங்களாலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. குறிப்பிட்ட இரு பேரிடர்கள் நிகழ்ந்த போதும், தமிழ்நாடு அரசின் கோரிக்கை மனு கிடைக்கும் முன்பே ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் (MHA) (Ministry of Home Affairs) IMCT எனும் குழுவை அமைத்துவிட்டது. (Inter Ministrial Central Team IMCT).

இந்தக் குழுவினர் MI CHAUNG புயலால் சேதமடைந்த பகுதிகளை, 2023 டிசம்பர் 11ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை நேரிடையாகப் பார்வையிட்டனர். மேலும், வெள்ளத்தாலும் கனத்த மழையாலும் பாதிக்கப்பட்ட தென் தமிழ்நாட்டுப் பகுதிகளுக்கு நேரில் சென்று டிசம்பர் 11 முதல் 22 வரை சேதங்களைப் பார்வையிட்டனர். இதற்கென உள்துறை அமைச்சகம் (MHA) இன்னொரு IMCT குழுவை பிரத்யேகமாக அமைத்து அனுப்பி வைத்தது.

தமிழ்நாடு அரசு உபரியாக நிதி உதவி கோரி இரண்டு மனுக்களை அனுப்பியுள்ளது. புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் சார்ந்த நிவாரணப் பணிகளுக்காக ஒன்று. மழையாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதங்கள் சார்ந்த நிவாரணப் பணிகளுக்காக நிதிஉதவி கோரி மற்றொன்று. இரண்டு கோரிக்கை மனுக்களும் கிடைத்தபின் நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டன.

2024 ஜனவரி 11 முதல் 14 வரை மீண்டும் IMCT குழுவினர் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களுக்கு நேரிடையாகச் சென்று சேதங்களை மதிப்பிட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட இடங்கள் அனைத்திற்கும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

IMCT குழுவினரின் அறிக்கை வந்ததும் மேலும் அதிக நிவாரணத் தொகை வழங்குதல் குறித்த முடிவு கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளின்படி எடுக்கப்படும். NDRF (National Disaster Response Fund) திட்டத்தின்கீழ் உபரியான உதவித் தொகை வழங்குவது பரிசீலிக்கப்பட்டு தக்க முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் நித்யானந்த்ராய் பதிலளித்துள்ளார்.

---

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! ஆ.செந்தில் வரவேற்புரை!

# புதுக்கோட்டை நகர தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் சூர்யா வெற்றிகொண்டான் சிறப்புரை!

புதுக்கோட்டை,பிப்.12-
புதுக்கோட்டை நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (12.02.2024 - திங்கட்கிழமை), மாலை 6.00 மணியளவில் புதுக்கோட்டை திலகர் திடலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது. புதுக்கோட்டை நகர தி.மு.க. செயலாளர் ஆ.செந்தில் வரவேற்புரை ஆற்றுகிறார்

கழக அமைப்பு செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமானஎஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தலைமை கழகவழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வுகளில் எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம்,த.சந்திரசேகரன், பி.டி.அரசகுமார், அரு.வீரமணி, சுப.சரவணன், வி.என்.மணி, புதுகை விஜயா, திலகவதி செந்தில், எம்.லியாகத் அலி, கே.ஆர்.என்.போஸ், சு.சண்முகம், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, எம்.எஸ்.அசோக்பாண்டியன், கீரை.தமிழ்ராஜா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, தவ . பாஞ்சாலன், தென்னலூர் எம்.பழனியப்பன், ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், மு.க.ராமகிருஷ்ணன், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், சக்தி ராமசாமி, எஸ்.திருஞானசம்பந்தம், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், க.நைனாமுகமது, சி.ஆர்.வி. சித்ரா, ஆர்.செல்லத்துரை, சையது முகம்மது, பூங்குடி எம்.சிவா, கே.கணபதி, எம்.வேலுச்சாமி, பி.சண்முகம், ரெ.தங்கம், ஆர்.பாலகிருஷ்ணன், ஏ.ராமலிங்கம், உரக்கடை எம்.கருப்பையா, ப.ரெங்கராஜன், எம்.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, சேட்டு (எ) ஷாஜகான், இராய. முத்துக்குமார், எம்.எம்.பாலு, மு.ராஜதுரை, மு.க. அறிவுடைநம்பி, எம்.காதர்கனி, ஆ.ஜேம்ஸ், வை.கோ.ராஜன், மு.கலியமூர்த்தி, க.ரெங்கராஜ், செந்தாமரை பாலு, மு.பி.மணி, இராம. செல்வராஜ், டாக்டர் சி.குறிஞ்சிவாணன், டி. அப்புக்காளை, தவசுமணி, மணிமொழி மனோகரன், சி.அரங்கநாயகம், மாலா ராஜேந்திரதுரை, பி.சின்னையா, மு.கலைஞர் கருணாநிதி, சா.மூர்த்தி, செ.கணேஷ், மஜீத் முபாரக், எஸ்.கமலா, புதுநகர் குமார், எஸ்.வி.ஆர்.ஜெய்ஸ்டாலின், க.கவிவேந்தன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், என்.சேட்டு, எம்.பரமசிவம், மு.பி.ம.சத்தியசீலன், மா.தமிழ்அய்யா, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்காசலம், வெ.முத்துகிருஷ்ணன். ஆ. இளங்குமரன், சி.சண்முகம், ஆர்.சாமிநாதன் கே.பி.அய்யப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் வை. விஜயக்குமார், உ.முருகேசன், பா.அண்ணாத்துரை, எம்.எஸ்.ஏ.முகமது ரிசா,

ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், பேரூராட்சி தலைவர்கள் பாண்டிச் செல்வி கே.ஆர்.என்.போஸ், காமு மு.பி.மணி, பி.சின்னையா, லதா இளங்குமரன், கல்யாணி மாரிமுத்து, சித்ரா ரவிச்சந்திரன், த.செல்வம், நா.ஸ்டாலின், ராஜேஸ்வரி செந்தில்குமார், சாந்தி தங்கசிங்கம், கை. பழனிச்சாமி, டி.ஜெய மீரா ரவிக்குமார், வி.சகுந்தலா வைரவன், எம்.ஏ.எம். இம்தியாஸ், இ.செந்தில் ராஜா, எம்.நைனா முகமது, கழக முன்னோடிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.எஸ்.ச. இளையச்சூரியன், புத்தாம்பூர் எம்.சுப்பையா, டி.எம்.ஆர். ராமமூர்த்தி, டி.சூசைராஜ், ஆர்.டி.ஆர்.ராமசாமி, அ.பிரபா, பொன்.பாரிவள்ளல், வி.என்.எம்.பாலு, வி.ஜி.ஆர். மணிவண்ணன், எம்.செந்தில்குமார், வே.ராஜேஸ், எம்.ராஜா,

கா.இளவரசன், என். வீரைய்யா, மு. இளஞ்சேரன் முத்துசாமி மற்றும் மாவட்ட, ஒன்றிய , நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் நகர அவைத் தலைவர் அ.ரெத்தினம் நன்றி கூறுகிறார்.



நாகை மாவட்டம், நாகை வடக்கு ஒன்றியம், புத்தூரில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் நாகை வடக்கு ஒன்றியச் செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், நாகை வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் கேஸ் வி.செந்தில், பாஸ்கர் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளனர்.

---

## நாடாளுமன்றத் தேர்தல் – 2024

# தலைமைக் கழக WAR ROOM அறிவிப்பு

எதிர்வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை தலைமைக் கழகத்திலிருந்து ஒருங்கிணைப்பதற்காக பின்வரும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**தொகுதி பார்வையாளர்கள் ஒருங்கிணைப்பு,**
**பூத் கமிட்டி மேலாண்மை, பரப்புரை மேற்பார்வை** : **அன்பகம் கலை**
(இணை அமைப்புச் செயலாளர்)

**ஊடக விவாதக்குழு மேலாண்மை,**
**நட்சத்திர** பேச்சாளர்கள் **பரப்புரை மேலாண்மை** : **எஸ். ஆஸ்டின்**
(துணை அமைப்புச் செயலாளர்)

**சட்டக்குழு மற்றும் தேர்தல் ஆணையம்** : **என்.ஆர்.இளங்கோ,எம்.பி.,**
(சட்டத்துறைச் செயலாளர்)

**தலைமைக் கழக WAR ROOM அலுவலக தொடர்பு எண்: 08069446900**

## தலைமைக் கழக தேர்தல் பணி வழக்கறிஞர்கள்

**தேர்தல் வழக்குகள் - நீதிமன்றக் குழு**

| | |
|---|---|
| மூத்த வழக்கறிஞர் ஆர். சண்முகசுந்தரம் | 98410 12142 |
| மூத்த வழக்கறிஞர் ஆர். விடுதலை | 94444 01260 |
| மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் | 98410 47853 |

**தலைமைக் கழக ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| துறைமுகம் காஜா | 98410 77220 |
| பூச்சி முருகன் | 94444 22222 |

**தேர்தல் ஆணையம் - கோரிக்கைகள் மற்றும் சட்டப்பூர்வ அனுமதிகள்**

| | |
|---|---|
| வழக்கறிஞர் அ. சரவணன் | 98400 52191 |
| வழக்கறிஞர் ஜெ. பச்சையப்பன் | 98402 60178 |

**காவல்துறை - புகார்கள் மற்றும் பாதுகாப்பு**

| | |
|---|---|
| வழக்கறிஞர் அஸ்வின் பிரசன்னா | 90948 50012 |
| வழக்கறிஞர் அர்ஜுன் | 95009 92005 |

**மண்டல ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| வழக்கறிஞர் இ. பரந்தாமன், எம்.எல்.ஏ., | 91501 77717 |
| வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரன் | 98400 22250 |
| வழக்கறிஞர் கரூர் மணிராஜ் | 99449 31474 |
| வழக்றிஞர் ஈரோடு ராதாகிருஷ்ணன் | 98427 55335 |
| வழக்கறிஞர் கே. சந்துரு | 94440 06999 |
| வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான் | 94433 33318 |

**WAR ROOMல் பணி புரிவோர்**

| வ. எண் | பெயர் | தொடர்பு எண் |
|---|---|---|
| 1. | வழக்கறிஞர் மருது கணேஷ் | 98400 34950 |
| 2. | வழக்கறிஞர் ரகு | 94444 13889 |
| 3. | வழக்கறிஞர் ம. நந்தகோபால் | 98841 53737 |
| 4. | வழக்கறிஞர் இரா. உதயகுமார் | 89397 06868 |
| 5. | வழக்கறிஞர் எம்.ஏ.முகமது அர்ஷத் | 97102 47077 |
| 6. | வழக்கறிஞர் இ.விஸ்வநாதன் | 99412 65999 |
| 7. | வழக்கறிஞர் ஜெயராமன் | 90258 49604 |
| 8. | வழக்கறிஞர் பி.அய்யப்பன் | 98419 09078 |
| 9. | வழக்கறிஞர் வி.எம். சங்கர்கணேஷ் | 86676 22182 |
| 10. | வழக்கறிஞர் எம்.ஜெய்கணேஷ் | 98412 01972 |
| 11. | வழக்கறிஞர் ஜே. கார்த்திகேயன் | 99626 73666 |
| 12. | வழக்கறிஞர் வி.திருக்குறளார் | 75502 29298 |
| 13. | வழக்கறிஞர் ஏ.என்.சிவவேலு | 88386 73933 |
| 14. | வழக்கறிஞர் எம். சரத்குமார் | 70927 38661 |
| 15. | வழக்கறிஞர் ஜே.சிவசங்கர் | 97909 64025 |
| 16. | வழக்கறிஞர் சேனாபதி | 98412 18158 |
| 17. | வழக்கறிஞர் சசிதரன் | 98520 84065 |
| 18. | வழக்கறிஞர் சரவணக்குமார் | 98848 49123 |
| 19. | வழக்கறிஞர் தினகரன் | 98404 43710 |
| 20. | வழக்கறிஞர் ராஜ்குமார் | 90947 36335 |
| 21. | வழக்கறிஞர் சதீஷ்குமார் | 81224 10448 |
| 22. | வழக்கறிஞர் என். அர்ஜுனன் | 94448 83350 |
| 23. | வழக்கறிஞர் வி. அருண்ராஜன் | 98413 07307 |
| 24. | வழக்கறிஞர் ஜி.என்.ஆண்டனி பிரபு | 86678 06851 |
| 25. | வழக்கறிஞர் எஸ்.ஐ. முத்துகுமார் | 98402 66128 |
| 26. | வழக்கறிஞர் டி.முல்லை ஜசல்வன் | 94442 96689 |
| 27. | வழக்கறிஞர் எஸ்.பி.லட்சுமணன் | 8939 669948 |
| 28. | வழக்கறிஞர் ஜி. சந்திரபோஸ் | 98413 64135 |
| 29. | வழக்கறிஞர் பி. ஜோசப் பாரி | 96000 46186 |
| 30. | வழக்கறிஞர் கே. வேலுசாமி | 99623 53505 |
| 31. | வழக்கறிஞர் இ. மகேஷ் | 93828 93884 |
| 32. | வழக்கறிஞர் டி.ரவிசங்கர் | 86107 12653 |
| 33. | வழக்கறிஞர் எல். சுந்தரமூர்த்தி | 98417 00507 |

தலைமைக் கழக **WAR ROOM** அன்றி, ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு WAR ROOM அமைக்கப்படும். அதில்,

**DLC - DISTRICT LEVEL COORDINATOR** (கழக மாவட்டம்)

**CLC - CONSTITUENCY LEVEL COORDINATOR** (சட்டமன்றத் தொகுதி)

**FLC - FRONT LEVEL COORDINATOR** (காவல் நிலைய எல்லைக்கு மூன்று வழக்கறிஞர்கள்)

என்ற நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 10.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.